ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2211/55 - 2021 ජනවාරි මස 21 වැනි බ්‍රහස්පතින්දා - 2021.01.21

2211/55 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 21 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

(முத்திரை)

கோட்டாபய ராஜபக்ஷ

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதியுத்தமராம் சனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களினால்**

1. கௌரவ ஏ. எச். எம். டி. நவாஸ் அவர்கள்
   உயர் நீதிமன்ற நீதிபதி
2. திரு. சந்திரா பெர்ணாந்து
   ஓய்வுபெற்ற பொலிஸ் மா அதிபர்
3. திரு. நிமல் அபேசிறி
   ஓய்வுபெற்ற மாவட்டச் செயலாளர்

ஆகியோருக்கு,

வாழ்த்துக்கள்!

இலங்கையின் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் மேம்பாடு தொடர்பாக 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 40/1 முன்மொழிவில் மற்றும் அதற்கு முன்னதாக 2015, ஒற்றோபர் மாதம் 30/1 மற்றும் 2017 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 34/1 முன்மொழிவுகளின் இணை அனுசரணையிலிருந்து இலங்கை அரசு விலகுவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானம் பற்றி 2020, பெப்புருவரி மாதம் 26 மற்றும் 27 ஆந் திகதிகளில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 43 ஆவது அமர்வின்போது அறிவிக்கப்பட்டுள்ளதாதலாலும்;

1A - G 33562 — 385 (2021/01)

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

மேற்போந்த முன்மொழிவுக்காக இணை அனுசரணை வழங்குவதிலிருந்து இலங்கை விலகினாலும், நிலைபேறான சமாதானமொன்றை மற்றும் நல்லிணக்கமொன்றை ஏற்படுத்துவதற்காகப் பொறுப்புக்கூறல் மற்றும் மனித வள அபிவிருத்தியை அடைவதற்காக மேலும் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் அதன் முகவராண்மைகளோடு ஒத்துழைப்புடன் செயற்படுவது இலங்கை அரசின் கொள்கையாக இருப்பதனாலும்;

தீர்க்கப்பட வேண்டிய ஏனைய பிரச்சினைகளுக்காகச் சனநாயக மற்றும் சட்டபூர்வமான செயற்பாடுகளினூடாகத் தீர்வுகளை வழங்குவதற்கு மற்றும் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் நிறுவன ரீதியிலான திருத்தங்களைச் செய்வதன்மூலம் நீதி மற்றும் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் கடமைப்பட்டுள்ளதாலும்,

அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்களை அடைவதில் இலங்கையின் இறைமையைப் பாதுகாத்துக்கொள்ளும் அணிசேரா வெளிநாட்டுக் கொள்கையொன்றை அடிப்படையாகக்கொண்டு செயற்படுவது அடிப்படைத் தேவையொன்றாக இனம் காணப்பட்டுள்ளதாலும்,

இடம்பெற்றுள்ளதாக கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக புலனாய்வு செய்வதற்கு ஆரம்ப விசாரணை ஆணைக்குழுக்கள் மற்றும் குழுக்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதனாலும்,

சொல்லப்பட்ட விசாரணை ஆணைக்குழுக்கள் மற்றும் குழுக்கள் மூலம், இடம்பெற்றுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ள சில மனித உரிமைகள் தொடர்பாக மற்றும் ஏனைய அவ்வாறான தவறுகள் தொடர்பாகப் பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாலும்,

இங்கு இதன்பின்னர் காட்டப்படும் விடயங்கள் பற்றிப் புலனாய்வு செய்தல், விசாரணை செய்தல் மற்றும் அறிக்கையிடல் அல்லது தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்காக விசாரணை ஆணைக்குழுவொன்றை நியமிப்பது அவசியம் என நான் கருதுவதாலும்,

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி பதவியை வகிக்கும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகிய நான், தங்களின் விவேகம், திறமை மற்றும் பற்றுறுதி என்பவற்றின்மீது மிகுந்த பக்தியும் நம்பிக்கையும் வைத்து, விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் (393 ஆம் அத்தியாயமான) 2 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய மேற்சொல்லப்பட்ட,

1. கௌரவ ஏ. எச். எம். டி. நவாஸ் அவர்கள்
   உயர் நீதிமன்ற நீதிபதி
2. திரு. சந்திரா பெர்ணாந்து
   ஓய்வுபெற்ற பொலிஸ் மா அதிபர்
3. திரு. நிமல் அபேசிறி
   ஓய்வுபெற்ற மாவட்டச் செயலாளர்

ஆகிய உங்கள் அனைவரையும் பின்வரும் விடயங்களைப் புலனாய்வு செய்தல் மற்றும் விசாரணை செய்தல், மற்றும் அறிக்கையிடுதல் அல்லது தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்காக எனது ஆணையாளர்களாக இத்தால் நியமிக்கின்றேன்.

சொல்லப்பட்ட விடயங்கள் என்னவெனில்,

(அ) மனித உரிமை மீறல்கள் தொடர்பாக புலனாய்வு செய்வதற்காக ஆரம்பத்தில் நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுக்கள் மற்றும் குழுக்களின் மூலம் நடத்தப்பட்ட புலனாய்வுகளின்போது பாரதூரமான வகையிலான மனித உரிமை மீறல்கள், பாரதூரமான அளவில் சர்வதேச மனிதாபிமான சட்டங்களை மீறுதல்கள் மற்றும் வேறு அவ்வாறான பாரதூரமான குற்றங்கள் தொடர்பாகக் கண்டறியப்பட்டுள்ளதா என்பதையும்;

(ஆ) சொல்லப்பட்ட விசாரணை ஆணைக்குழுக்கள் மற்றும் குழுக்களினால் மேற்போந்த பாரதூரமான அளவில் மனித உரிமை மீறல்கள், பாரதூரமான அளவில் சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்கள் மற்றும் அவ்வாறான தவறுகள் தொடர்பாகக் கண்டுபிடிக்கப்பட்ட விடயங்கள் யாது என்பதனை இனங்காணுதல் மற்றும் சொல்லப்பட்ட விடயங்கள் தொடர்பாக செயற்பட்ட விதம் தொடர்பாக பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(இ) சொல்லப்பட்ட பரிந்துரைகள் தொடர்பாக நடைமுறையிலுள்ள சட்டங்களுக்கமைய இதுவரை செயற்பட்டுள்ள விதம் மற்றும் தற்போதைய அரச கொள்கைகளுக்கமைய மேலும் அப் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் என்ன என்பதையும்;

(ஈ) மேற்குறிப்பிடப்பட்ட (ஆ) மற்றும் (இ) இன் வண்ணம் நடவடிக்கை எடுக்கப்படுகிறதா என்பது தொடர்பாக மேற்பார்வை செய்தல்;

மேலும், மேலே சொல்லப்பட்ட, உயர் நீதிமன்ற நீதிபதி கௌரவ ஏ.எச்.எம்.டி. நவாஸ் ஆகிய உங்களை, ஆணைக்குழுவின் தலைவராக நான் இத்தால் நியமிக்கின்றேன்.

மேலும், மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பாகத் தங்களுக்குத் தெரிகின்றவாறு தேவைப்படக்கூடிய விசாரணைகள் மற்றும் சகல புலனாய்வுகளை நடாத்துவதற்கு மேற்சொல்லப்பட்ட ஆணையாளர்கள் ஆகிய உங்களுக்கு இத்தால் அதிகாரம் மற்றும் தத்துவங்களை வழங்குவதோடு, அதன்போது வெளிப்படும் விடயங்கள் தொடர்பாக இடைக்கால அறிக்கைகளை தேவைக்கமையச் சமர்ப்பிக்க வேண்டுமென்பதுடன், உங்களின் பரிந்துரைகளை மேற்கோள்காட்டி உங்களின் கையொப்பத்தோடு சொல்லப்பட்ட விடயங்கள் தொடர்பான இறுதி அறிக்கையை இவ் அதிகாரப்பத்திரத்தின் திகதியிலிருந்து ஆறு மாத காலத்திற்குள் எனக்குச் சமர்ப்பிக்குமாறு இத்தால் உங்களுக்குப் கட்டளையிடுகின்றேன்.

மேலும், மேற்போந்த விடயங்களுக்குரிய ஏதேனும் புலனாய்வு அல்லது விசாரணையின் ஏதாவதொரு பகுதியொன்றை வெளிப்படையாக நடத்தக்கூடாது எனத் தாங்கள் கருதும் பட்சத்தில், அப் பகுதியை வெளிப்படையாக நடாத்தக் கூடாது என நான் உங்களுக்குக் கட்டளையிடுகின்றேன்.

மேலும் உங்களின் புலனாய்வு அல்லது விசாரணைப் பணிகளுக்காகத் தங்களால் ஒத்துழைப்பு அல்லது தகவல் கோரக்கூடிய சகல அரச உத்தியோகத்தர்கள், நியதிச்சட்ட சபை உத்தியோகத்தர்கள் மற்றும் வேறு நபர்களினால் அப்பணிகளுக்காக உரியவாறு வழங்கப்படக்கூடிய சகல ஒத்துழைப்புகளையும் வழங்க வேண்டுமென்பதோடு, வழங்கக்கூடிய சகல தகவல்களையும் வழங்க வேண்டுமென்பதையும் இத்தால் கட்டளையிட்டுப் பணிப்புரை விடுக்கின்றேன்.

மேலும், மேற்போந்த விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் (393 ஆம் அதிகாரம்) 14 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள், இவ் ஆணைக்குழுவுக்கு ஏற்புடையதாக இருத்தல்வேண்டும் என்பதனை இத்தால் குறிப்பிடுகிறேன்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பகிரங்க இலச்சினையின் கீழ் இரண்டாயிரத்து இருபத்தோராம் ஆண்டு சனவரி மாதம் 20 ஆந் திகதியாகிய இன்று கொழும்பில் வழங்கப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

**பீ. பி. ஜயசுந்தர,**
சனாதிபதியின் செயலாளர்.

*2-17*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.